**OS. No. 133/2013 PW1 -ஜெயகனி ,**
த/பெ.எமராஜன் தேதி 14.03.2025

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை ;**

1) நான் டிப்ளோமோ நர்சிங் முடித்துள்ளேன். எனது தகப்பனார் பெயர் எமராஜா , அவர் டிரைவர், எனது அண்ணன் பெயர் ஜெயமாயன் ஆகும். அவர் காவல் துறையில் பணிபுரிகிறார். அம்மா பெயர் ராமுதாய் ஆகும். எனது தகப்பனார் தாக்கல் செய்துள்ள பிராதின் முழு விபரமும் எனக்குதெரியும். எனது பிராதில் எந்த சர்வே எண்ணில், எவ்வளவு விஸ்தீரணத்திற்கு வழக்கு போட்டுள்ளேன் என்றால் சர்வே எண் 31 ல் 3 ஏக்கர் 7 செண்டு B செடியூல் ஆகும். அந்த சொத்திற்கு மட்டும் தான் பரிகாரம் கேட்டுள்ளேன் A மற்றும் B செடியூல்இரண்டிற்கும் பரிகாரம்கேட்டுள்ளேன். இரண்டு சொத்திலும் பாகம் கேட்டு எனது தகப்பனார் வழக்கு தாக்கல் செய்துள்ளார். சர்வே எண் 53/1 மற்றும் 53/2 ற்கு தற்போது யார் பெயரில் பட்டா உள்ளது என்றால் 1ம் பிரதிவாதி செல்வம் மற்றும் எனது தகப்பனார் எமராஜன் பெயரில் பட்டா உள்ளது . மேற்படி சர்வே எண்களுக்குஎனது தகப்பனார் பெயரிலும் 1ம் பிரதிவாதி பெயரிலும் பட்டா எதுவும் இல்லை என்றால் சரியல்ல பட்டா உள்ளது.

2) சர்வே எண் 53/1 மற்றும் 53/2 ற்கும் எனது அப்பா மற்றும் எனது பெரியப்பா பெயரில் உள்ள கூட்டுபட்டாவை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு எந்த பட்டாவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. சர்வே எண் 39/1 ல் மட்டும் தான் எனது அப்பா பெயருக்கும் 1ம் பிரதிவாதியின் பெயருக்கும் கூட்டுப்பட்டா இருந்தது என்றும் தற்போது அது எனது அப்பா பெயரிலும், 1வது பிரதிவாதியின் மனைவி 4ம் பிரதிவாதியின் பெயரில் உள்ளது என்றால் வழக்கு தாக்கல் செய்த பின்பு அவ்வாறு சட்டத்திற்கு புறம்பாக மாற்றி உள்ளார்கள். தாவா சொத்தை எனது அப்பா எமராஜா 1993 ல் ரூபாய் 15,000/– ற்கு பதிவின் மூலம் ஈடு வைத்தார் என்றால் எனது அப்பா தற்போது வரை யாருக்கும் ஒத்தி வைக்கவில்லை.

3) 1993ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 19 ம் தேதி மலைப்பட்டியில் இருக்கும் வடவீரணத்தேவர் மகன் சின்னிவீரத்தேவர் என்பவருக்கு ரூபாய் 15,000/– ற்கு பதிவின் மூலம் ஈடு கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. அந்த சொத்து சர்வே எண் 39/1 ல் இருந்தது என்றால் சரியல்ல. அந்த பதிவு ஈடுப்பத்திரத்தில் எனக்கும் எனது அண்ணன் செல்வத்திற்கும் வாய் மூலம் பாகம் கிடைத்த சொத்து என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் எங்கள் தாத்தா இறந்த பிறகு இன்றுவரை நாங்கள் தான் விவசாயம் செய்து வருகிறோம் யாருக்கும் ஈடு வைக்கவில்லை. அந்த பதிவு ஈடு பத்திரத்தில்

செல்வம் பாக புஞ்சைக்கும், கிழக்கு என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் செல்வம் மோசடியாக உற்பத்தி செய்துள்ளார்.

4) எனது தகப்பனார் தாக்கல் செய்த வா.சா.ஆ.10 ஆவணத்தில் 27.07.2011ம் தேதி ராமன் மகன் ராமன் என்பவருக்கு எனது அப்பா எமராஜனும், எனது அண்ணன் ஜெயமாயனும் பதிவு கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் அந்த விபரம் தெரியாது. அந்த பதிவு கிரைய பத்திரத்தில் எங்களில் 1வது நபருக்குபூர்வீக சொந்த பாகமாய் பாத்தியப்பட்டு அனுபவித்து வருகிற சொத்துக்களில் ஒரு பகுதியான அடியில் கண்ட சொத்தை தங்கள் தோட்டத்திற்கு தாங்கள் போய் வர நடபாதைக்காக கிரையம் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அந்த ஆவணத்தில் சொத்து விபரத்தில் மேற்கே எனது அண்ணன் செல்வம் பாக உழவு சொல்லப்பட்டுள்ளது என்றால் நாங்கள் பாகம் பிரித்து கொள்ளவில்லை ஒன்றாக தான் உழவு செய்கிறோம்.

5) 08.07.2010 ம் தேதி பண்ணைப்பட்டியில் வசிக்கும் சின்னாத்தேவர் மகன் ஜெயகுமார் அவர்களுக்கு எனது அப்பா எமராஜா என்பவர் ரூபாய் 20,000/–ற்கு 3 வருடம் ஒத்தியாக தாவா சொத்தை கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. அந்த பதிவு பத்திரத்தில்எனக்கு பூர்வீக சொந்தமாய் பாத்தியப்பட்டு அனுபவித்து வருகிற அடியில் கண்ட சொத்தை என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சொத்து விபரத்தில் நான்குமாலில் மேற்கே எனது அண்ணன் செல்வக்குட்டி பாக நிலம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 10.01.2005ம் தேதியில் போத்தம்பட்டியில் குடியிருக்கும் முத்துக்கண்ணத்தேவர் மகன் கருப்பு கண்ணத்தேவர் என்பவருக்கு ஒத்தி வைத்துள்ளார் என்றால் சரியல்ல. அந்த ஒத்தி பத்திரத்தில் எனக்கு பூர்வீக சொந்தமாய் பாத்தியப்பட்டு நான் கைவசம் வைத்துள்ள அடியில் கண்ட சொத்து என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

6) அந்த சொத்து விபரத்தில் நான்கு மாலில் மேற்கே செல்வக்குட்டி பாக நிலம் என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது அப்பாவிடம் இதையெல்லாம் முழுமையாக கேட்காமல் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கூட்டுப்பட்டாவில் உள்ள தாவா சொத்தில் தான் நாங்கள் குடியிருக்கிறோம் என்றால் சரிதான். தகரம் ஓடு போட்ட வீடு என்றால் சரிதான். அந்த வீடு கட்டி 15 ஆண்டுகள் இருக்கும். அந்த வீட்டிற்கு மின் இணைப்பு எனது தாயார் ராமுதாய் பெயரில் உள்ளது என்றால் சரிதான். எனது அப்பா பாகச் சொத்தில் அந்த வீடு உள்ளது என்றால் கூட்டுப்பட்டாவில் உள்ளது, வீடு கிழக்கு பக்கம் உள்ளது. மின் இணைப்பு எந்த வருடம் வாங்கினோம் என்றால் ஞாபகமில்லை. 25.02.2003ம் தேதி எனது அம்மா பெயருக்கு மின்

இணைப்பு வாங்கியுள்ளோம் என்றால் தெரியவில்லை.

6) எனது பிராதில் 1ம் பிரதிவாதி தாவா சொத்தில் மேல்புறம் பல்வேறு நபர்களுக்கு ஒத்தி, கிரையம் கொடுத்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 28.01.2013 ம் தேதி செல்வம் மனைவி 4ம் பிரதிவாதிக்கு எனது பெரியப்பா 1ம் பிரதிவாதி தானசெட்டில்மெண்ட் பதிவு கொடுத்துள்ளார் என்றால் வழக்கிற்கு பின்பு மோசடியாக பதிந்துள்ளார். எனக்கு வழக்கு சம்பந்தமாக எதுவும் தெரியாது என்றும், நான் முறையாக எனது தகப்பனாரிடம் தகவல் பெறாமல் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பட்டா எண் 1285ல் சர்வே எண் 39/1ல் தாவா சொத்திற்கு எனது அப்பா மற்றும் 4ம் பிரதிவாதி பெயரில் கூட்டுப்பட்டா உள்ளது என்றால் மோசடியாக பட்டா பெற்றுள்ளார்கள். தாவாச் சொத்தில் 27.07.2011 ம் வருடம் எனது அப்பா எமராஜாவும், 1வது பிரதிவாதியும் ஒரு குடும்ப ஒப்பந்தம் ஒன்றை வெண்ணிலையாக ஏற்படுத்தி கொண்டார்கள் என்றால் சரியல்ல எதுவும் போடவில்லை.

7, எனது அப்பாவும், 1வது பிரதிவாதியும் வாய்மூலம் தாவாச் சொத்தை சட்டபூர்வ காலத்திற்கு முன்பாகவே வாய்க்கிரலார் மூலம் பாகம் பிரித்து அவர் அவர் பாகத்தை தனித்தனியாக மொத்த சொத்திற்கு மேற்கு பக்கம் 1ம் பிரதிவாதிக்கும், கிழக்கு பக்கம் எனது தகப்பனாருக்கும் பாகமாக்கப்பட்டு அனுபவம் செய்து பல்வேறு ஆவணங்கள் வேறு மூன்றாம் நபர்களுக்கு பதிவின் மூலம் கொடுத்துள்ளார்கள் என்றால் இதுவரை பாகம் பிரிக்கவில்லை ஒன்றாக தான் அனுபவம் செய்து வருகிறோம் . நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது அப்பா நல்ல உடல்நிலையில் இருந்து வருகிறார்என்று சொன்னால் சரியல்ல. எனது அப்பாவை விசாரித்தால் தான் உண்மை நிலவரம் தெரியவரும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை : இல்லை.**

S.d./Jeyakani
Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.. S.Maharajan
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.